<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 142 /2016</u>

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் நாள் சனிக்கிழமை அரசு தரப்பு சாட்சி–1(PW–1)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **இளையரசி** | தொழில் | | **கூலிவேலை** |
| **க/பெ.** | : | **ரமேஷ்** | ஊர் | | **முல்லைக்குடி** |
| வயது | : | 40 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

**<u>25.10.2025</u>**

**<u>எதிரி பிரகடணப்படுத்தப்பட்ட குற்றவாளியாக M.P.1/2025– ன் படி அறிவிக்கப்பட்டுள்ளார், கு.வி.மு.ச பிரிவு 299–ன் கீழ் சாட்சி விசாரணை செய்யப்படுகிறார்,</u>**

**முதல் விசாரணை :**

1) நான் முல்லைக்குடியில் வசித்துவருகிறேன். எதிரி சிவக்குமார் எனது அம்மாவின் சித்தப்பா மகன் எனக்கு மாமா முறையாவர். அவரது ஊர் பழைய ஆற்காடு.

2) எனக்கு 2005 ல் திருமணம் ஆனது. எனக்கு ஒரு ஆண் மற்றும் பெண் குழந்தை உள்ளார்கள். 2008 ல் எனது கணவர் இறந்துவிட்டார். அதன் பிறகு நான் எனது குழந்தைகளுடன் முல்லைக்குடியில் உள்ள எனது அம்மாவீட்டில் தங்கியிருந்தேன். அப்போது சிவக்குமார் என்னுடன் பழகி, என்னை திருமணம் செய்து கொள்வதாக சொன்னார். என்னை அவருடன் அவர் வேலை பார்கும் லால்குடி அன்பில் அருகே உள்ள பருத்திக்காட்டுக்கு அழைத்து சென்று அங்கு வீடு எடுத்து எனது பிள்ளைகளுடன் சேர்ந்து தங்கவைத்தார். அங்கு ஒன்றாக குடும்பம் நடத்தினேன்.

3) தாலி கட்டுவதாக சொன்னார். எனது கழுத்தில் இருந்த 2 பவுன் தங்கச்செயினை வாங்கி அடகு வைத்து இருசக்கர வாகனம் வாங்கிக்கொண்டார். 3 மாதம் பருத்திக்காட்டில் வாழ்ந்தோம். அதன் பிறகு, வண்டி தவணைத்தொகை கட்டிவிட்டு வருவதாக சொல்லி அவரது ஊர்– பழைய ஆற்காட்டிற்கு, எங்களை அங்கே விட்டுவிட்டு வந்தார். 15 நாளாக

வரவில்லை. முல்லைக்குடியில் இருந்து பருத்திக்காட்டிற்கு என்னை அழைத்து செல்லும்போது அவர் மூலம் நான் 5 மாத கர்பமாக இருந்ததேன். போன் பண்ணினாலும் போன் எடுக்கவில்லை.

4) பருத்திக்காட்டில் சிறிது நாள் இருந்துவிட்டு எனது அம்மா வீட்டிற்கு வந்து எனது அம்மாவை அழைத்து சென்று மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அப்போது நான் 8 மாத கர்பமாக இருந்தேன். அவர் எங்கு இருக்கிறார் என்று விசாரித்தேன் கண்டுபிடிக்க முடியவில்லை. என்னை திருமணம் செய்யாமல் ஏமாற்றி விட்டுவிட்டு சென்றுவிட்டார் என்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. **(புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அதன் பிறகு பெண் குழந்தை பிறந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள். DNA Test–ம் எடுத்தார்கள்.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.

**CC. No. 142 /2016**

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் நாள் சனிக்கிழமை அரசு தரப்பு சாட்சி–2(PW–2)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **கலையரசி** | தொழில் | | **சுயதொழில்** |
| க/பெ. | : | **தேசிங்கு** | ஊர் | | **முல்லைக்குடி** |
| வயது | : | 45 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

**25.10.2025**

**எதிரி பிரகடணப்படுத்தப்பட்ட குற்றவாளியாக M.P.1/2025– ன் படி அறிவிக்கப்பட்டுள்ளார், கு.வி.மு.ச பிரிவு 299–ன் கீழ் சாட்சி விசாரணை செய்யப்படுகிறார்,**

**முதல் விசாரணை :**

1) நான் முல்லைக்குடியில் வசித்துவருகிறேன். அ.சா.1 எனது தங்கை. அ.சா.1ன் கணவர் இறந்தபிறகு, அவர் எங்கள் அம்மா வீட்டில் வந்து தங்கியிருந்தார். அவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். எங்கள் அம்மாச்சி மகன் எங்கள் அம்மா வீட்டுக்கு வந்து போக இருந்தார். எனது தங்ககை சிறு வயதிலேயே கணவனை இழந்ததால் நானே திருமணம் செய்து கொள்கிறேன் என்று எனது அம்மாச்சி மகன் சொன்னார். அவர் குடும்பத்திற்கும் எங்களுக்கும் அதிக பேச்சு வார்த்தை இல்லாததால் பெயர் ஞாபகம் இல்லை.

2) எனது கணவர், அவரை அங்கள் வீட்டிற்கு வரவேண்டாம் என்று சொன்னார். ஆனால் எனது அம்மா வீட்டில் இருந்த அ.சா.1–வுடன் அவர் பழகி, எனது அம்மா வீட்டிற்கு அடிக்கடி சென்று வந்தார். அதில் அ.சா.1 கர்பமாகிவிட்டார். எங்கள் வீட்டை சேர்ந்தவர்கள். அவனை வேண்டாம் என்று சொன்னேமே என்று அ.சா.1 யை கேட்டுள்ளார்கள். திருமணம் செய்து கொள்வதாக அ.சா.1 டம் அவர் சொல்லி பழகி கர்பமாக்கியுள்ளார். அ.சா.1, தனது நகையை அடகு வைத்து அந்த பையனுக்கு வண்டி வாங்கிக்கொடுத்துள்ளார்.

3) திருமணம் செய்து கொள்வதாக சொல்லி அன்பிலுக்கு அழைத்து சென்று அங்கு அம்மாச்சி வீட்டில் ஒன்றாக இருந்துள்ளார்கள். 3 மாதம்

அங்கு இருந்துள்ளார்கள். அதன் பிறகு, வண்டி தவனைத்தொகை கட்டிவிட்டு வருவதாக சொல்லி அ.சா.1–ம் பிள்ளைகளையும் அங்கேயே விட்டுவிட்டு வந்துவிட்டார். அதன் பிறகு எங்கள் தாத்தா வீட்டில் இருந்து அந்த பையன் வீட்டினரிடம் பேசியதில், அவர்கள் திருமணம் செய்து வைக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். அந்த பையனும் வரவில்லை அதன் பிறகு அ.சா.1 க்கு பெண் குழந்தை பிறந்தது. எனது கணவர் இந்த பிரச்சனையால் என்னை என் அம்மா வீட்டிற்கு அனுப்புவதில்லை போலீசில் புகார் கொடுத்து DNA Test–ம் எடுத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.